[1971 டிசம்பர் 9

Dry Crop Development Scheme

*149 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there are proposals to open Special Farm Projects for dry crop development in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) ஆம்.

(இ) ஒருங்கிணைந்த புன்செய் வேளாண்மை வளர்ச்சித் திட்டம் ஒன்று திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டி வட்டத்தில் 1970-71-ஆம் ஆண்டிலிருந்து செயலில் உள்ளது. மற்ருெரு ஒருங்கிணைந்த புன்செய் வேளாண்மை வளர்ச்சித் திட்டம் திருச்சிராப்பள்ளி மாவட்டம், புதுக்கோட்டை வட்டத்தில் நடப்பாண்டில் செயலுக்குக் கொண்டுவர கருதப்பட்டுள்ளது. திட்டத்தை அமுலாக்கும் அரசின் உத்திரவு அண்மையில் பிறப்பிக் கப்பட்டுள்ளது.

திரு. ச. சங்குமுத்து தேவர்: தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்திலும் புன்செய் நிலங்களில் பழைய கிணறுகள் இருக்கின்றன. தற்போது வெட்டப்பட்ட கிணறுகளும் இருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களில் புன்செய் சாகுபடி செய்யாமல் அநேக இடங்கள் சும்மாவே கிடக்கின்றன எந்தெந்த பகுதிகளில் இப்படி பயிர் செய்யாமல் இருக்கின்றன என்பதை அரசினர் ஆராய்ந்து ஊக்குவிக்கும் வகையில் ஏதாவது நல்ல வழிவகை செய்யுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: கோவில்பட்டி வட்டத்தில் திட்டங்குளம், சிதம்பரபுரம், இளம்புவனம், விஜயாபுரி ஆகிய நான்கு கிராமங்களில் இத்திட்டப்பணி மேற்கொள்ளப் படுகிறது. உடனடியாக இத்திட்டத்தின் கீழ் 2,000 ஏஎக்கர் பரப்பு நிலங்கள் கொண்டுவரப்பட்டன. 1973-74-ம் ஆண்டுக்குள், படிப் படியாக நிறைவேற்றப்படும் திட்டத்தின் கீழ் 8,000 எக்கர் பரப்புக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.

திரு ஏ. ஆர். சுப்பையா: இந்தத் திட்டத்துக்கு மானியம் உண்டு என்ருல் என்ன தொகை கிடைக்கும்?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, பெருமளவில் மண்வளப் பாதுகாப்பு நடவடிக்கை எடுப்பதற்குத் தேவையேதுமில்லையென்ற போதிலும் நிலத்திலுள்ள மேல் மண் அடித்துச் செல்லப்படுவதைத் தடுக்கும் பொருட்டும், கரைகள், திட்டுகள் அரித்துச் செல்லப்படுவதைத் தடுக்கும் பொருட்டும் நிலச்சரிவில் குறுக்காகச் சிறு கரைகளை அமைப்பது தேவையாக இருக்கலாம். திட்டப் பணிகளுக்காகும் செலவு இதனுல் பயன் பெறுபவர்களால் சரிகட்டப்படும். இத் தொகையில் 75% கடனுகவும் 25% உதவித் தொகையாகவும் அளிக்கப்படும்.

1971 டிசம்பர் 9]

திரு. மா. வே. கரிவேங்கடம் : தலைவரவர்களே. இந்தத் திட்டத்தின்படி எல்லா பொருள்களும் இலவசமாகவோ அல்லது பாதி மானியத் தொகையாகவோ வழங்கப்படவேண்டும். இந்தத் திட்டத்தை தருமபுரி மாவட்டத்திற்கு விஸ்தரிக்க முயல்வீர்களா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின் நோக்கம் என்னவென்றால் சிறப்பாகத் தேர்ந்தெடுத்த பகுதிகளில் புன்செய் வேளாண்மைப் பற்றி ஆராய்ச்சி நடத்தும். மண்வளம் மற்றும் ஈரப் பாதுகாப்பு முறைகள் பற்றிய ஆராய்ச்சி களின் விளைவுகளைச் செயல்முறையில் கடைபிடித்தல், வரட்சி நிலையிலும் பாதிக்கப்படாத குறுகிய காலப் பயிர்களைப் பயிர் செய்தல், உரிய நேரத்தில் பயிர் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற் கொள்ளுதல் ஆகியவை போன்றவை செய்தல். இப்போது தருமபுரி மாவட்டத்தில் தொடங்க நோக்கம் இல்லை.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இத்திட்டத்தினால் ஏற்படும் பலன் என்ன ? இந்த திட்டத்திற்கு மத்திய அரசு உதவி எப்படி இருக்கிறது ? மாநில சர்க்கார் எவ்வளவு செலவிடுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, இந்த திட்டத்துக்கு 2,000 ஏக்கர்களில் செயல்படுத்தச் செலவாகும் மொத்தம் 19.89 லட்சம் ரூபாயில் 11.57 லட்சத்தை நீண்ட காலத் தவணைக் கடனாகவும் (மாநில அரசு திட்டமிட்ட ரூ. 13.75 லட்சத் திற்கு மாறாக) ரூ. 8.32 லட்சத்தை உதவி மான்யத் தொகையாகவும் (மாநில அரசு திட்டமிட்ட ரூ. 9.85 லட்சத்திற்கு மாறாக) அளிக்க மத்திய அரசு தற்பொழுது நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தை அமுல் நடத்துவதற்கான உத்திரவு 12—8—1971 நாளிட்ட வேளாண்மைத் துறை அரசாணை எண் 2284-ல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. சொ. காவேரிமணியம் : பேரவைத் துணைத் தலைவரவர் களே, இந்தப் புன்செய் மேம்பாட்டுத் திட்டம் இரண்டு மாவட்டங்களில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மற்ற மாவட்டங்களுக்கு இந்தத் திட்டத்தை விரிவாகச் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, புன்செய் நிலங்களில் பயிரிடுவோர்கள் மேம்படுத்திய வேளாண்மை நடைமுறைகளையும் பின்பற்ற உதவும் நோக்கத்துடன், மும்முரப் புன்செய் வேளாண்மைத் திட்டம் ஒன்று மத்திய அரசுத் திட்டங் களின்கீழ் உருவாக்கப்பட்டுள்ளது.

திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, புன்செய் வேளாண்மை அதிகம் நடைபெறும் இராமநாதபுரம் மாவட்டத்தில் இந்தச் சிறப்பு பணியை செயல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தற்பொழுது இல்லை.